
# போர்வாள்



உள்ளே:
டில்லி சபை!
கன்னடத்தில் பேசி...
மறுபடியும் கல்கத்...
பிச்சைக்காரி (சிறுகதை)


...ர்கள்: காஞ்சி. மணிமொழியார்
... இளஞ்செழியன், B. A. (Hons.)

திராவிடர் வார வெளியீடு.

தனி இதழ் அணா 1½
ஆண்டுத் தொகை ரூ. 5

...ள் 1 | சென்னை 6—9—47 சனிக்கிழமை | வீச்சு 4








...விளக்கம்: ஆகஸ்ட்புரட்சியில் நம்மைக் காட்டிக்கொடுத்த ...சாரியார் பிரதமர் ஆவதா என்று முழங்கினர் காமராஜர்— ...அன்பு. ஆனால் இன்றோ காமராஜர் ஆச்சாரியாருடன் கை ...த்துக்கொண்டு செல்கிருர். காமராஜருடன் சேர்ந்து ...ண்டு, "ராஜாஜி வேண்டாம்" என்று அன்று ஒலித்த ...ரஸ் தொண்டர்கள் இன்று செய்வதறியாது திகைக்கின் எவ்வளவு விரைவில் காலம் மாறிவிட்டது!

## எஃகு மனிதர் எக்காளம்

தேசீய வட்டாரத்தில் எஃகு மனிதர் என்ற விருது பெற்றவர் சர்தார் படேல்; காங்கிரஸ் கட்சியின் நிர்மாண கர்த்தா என்றும் அழைக்கப் படுபவர். நேருஜீ எங்கள் இதய கமலத்தில் வீற் றிருக்கும் வீர புருஷர் என்ருலும் அவர் இலட் சிய வாதிதான். ஆனல் படேல்ஜியோ காரியவாதி என்று கொஞ்சம் பெருமையோடுகூடப் பேசுவர் காங்கிரஸ் தோழர்கள். ஹிந்துஸ்தான் மத்திய அரசியலின் கடிவாளம் உண்மையிலேயே அவர் கையில்தான் இருக்கிறது—நேருவிடம் அல்ல. இவ்வளவு பெருமை வாய்ந்த சர்தார் படேல் தான் அரசியல் அமைப்பு மன்றத்தில் பேசுகை யில் கண்களில் நெருப்புப் பொறி பறக்கக் கூறி இருக்கிருர், "பாகிஸ்தான் வேண்டும் என்று கதறியவர்கள் போய்விட்டார்கள். இனியும் யாரேனும் ஹிந்துஸ்தானத்தைப் பிளக்கவேண் டும் அல்லது பிரிக்கவேண்டும் என்று கூப்பாடு போட்டால் அவர்களும் ஹிந்துஸ்தானத்தை விட்டுப் போய்விட வேண்டியதே" என்று. திரா விடநாட்டுப் பிரிவினை முழக்கத்தை நினைத்துத் தான் படேல் இப்படிச் சொல்லி இருக்கவேண் டும்............படேல்ஜி! திராவிடர்களாகிய நாங் களும் அதையேதான் சொல்லுகிறேம். ஹிந் துஸ்தானத்தை விட்டுப் போய்விடவே தான் விரும்புகிறேம். ஆனல் வெறுங்கையுடன் நாங் கள் போக மாட்டோம். எங்களுடைய திராவிட நாட்டை ஹிந்துஸ்தானிலிருந்து பிரித்தெடுத்துக் கொண்டுதான் போவோம். இது உங்களுக்கு விருப்பந்தான சர்தார்ஜி!

# இந்தியர் என்றோர் இனமில்லை.

## இந்தியா என்பதும் ஒரு நாடல்ல

### 1937-ல் பெரியார் விளக்கம்.

1938-ல் தான் பெரியார் தமிழ்நாடு தமிழருக்கே என்ற உயரிய இலட்சியத்ஞதத். தமிழருக்கு அளித்தார். ஆனால் அதற்கும் முன்னாலேயேகூட, இந்தியர் என்று தனியாக, ஓர் இனத்தவர் இல்லை என்றும் பல்வேறு இனத்தவர்களையும் கூட்டாகக் குறிக்கும் ஒரு சொல் வழக்கே அது என்றும் இந்தியா என்றழைக்கப்படும் நிலப்பரப்பு ஒருநாடு அல்ல— பல நாடுகள் கொண்ட ஒரு வட்டாரம் என்றும் அவர் கருதி இருந்தார் என்று தெரிகிறது. 19-9-37ல் கோவையில், "கட்டாய இந்தி தேவையா" என்ற தலைப்பில், தோழர் கே. பி. பிள்ளை என்பவருடன், பெரியார் இராமசாமி நிகழ்த்திய சொற்போரில் இந்தியா ஒரு நாடு அல்ல என்பதைத் திட்டமாகவும் தெளிவாகவும் குறிப்பிட்டிருக்கிறார். அந்தப் பகுதி இங்குத் தரப்படுகிறது.

....தோழர் கே. பி. பிள்ளை இந்தியா நம் தாய் நாடு என்று சொல்வதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்று நான் கேட்கிறேன்.

முதலாவது இந்தியா என்கின்ற பெயரே இந்த நாட்டிற்கு எப்போது ஏற்பட்டது! இதற்கு எல்லை என்ன? பர்மா சென்ற ஆண்டு இந்தியாவை விட்டுப பிரிந்துபோய் விட்டது.

அதற்குமுன் இலங்கை பிரிந்துவிட்டது. அதற்குமுன் நேப்பாளம் புத்தான் பிரிந்து விட்டது. அதற்குமுன் காந்தாரம் காபூல் ஆப்கானிஸ்தானம் பிரிந்துவிட்டது. இப்படி எவ்வளவோ பிரிந்து எவ்வளவோ சேர்ந்து இருக்கிறது. இந்த நிலையில் எப்படி இந்தியாவை நம் தாய்நாடு என்று கூறுவது? புராண காலத்தில் 56 நாடுகள் இருந்ததே அப்போது ஒரு நாட்டுக்காரன் மற்ற ஒரு நாட்டைத் தாய்நாடு என்று கருதினானா?

மாகாண சுதந்திரம் கொடுத்து மாகாணத்துக்கு மாகாணம் சர்வ சுதந்தரமாய் தன்தன் காலிலேயே நிற்கும்படியான நிலைமை ஏற்பட்டு ஐரோப்பா தேசத்தைப் போல் மொழிவாரியாகத் தனித்தனி நாடாகப் பிரிந்து கொண்டால் இந்தியா எப்படி எல்லோருக்கும் தாய் நாடாகும்? நேபால் நம் ஒரு ஜில்லாபோல் விஸ்தீரணம் உள்ளது. அவர்கள் இந்தியாவை தாய் நாடென்பார்களா. சையாமில் பெரிதும் இந்துமதம்தான். அவர்கள் இந்தியா தாய் நாடென்பார்களா?

ஐரோப்பாவில் நார்வே ஸ்வீடன் டென்மார்க்கு ஹாலந்து பெல்ஜியம் போர்சுகல் கிரீஸ் ஆகிய நாடுகள் நமது நான்கு ஜில்லா மூன்று ஜில்லா போன்ற விஸ்தீரணமுள்ளவை. இவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் நாட்டைத் தாய்நாடு என்பார்களே ஒழிய ஐரோப்பாவைத் தாய்நாடென்பார்களோ?"

ஆகவே தமிழ் நாட்டவர்கள் திராவிடமக்கள் எந்தக் காரணம் கொண்டு இந்தியாவைத் தாய் நாடென்று கூற வேண்டுமென்பதும், எதற்காக இந்தியா பூராவும் எப்போதும் ஒரு குடையின்கீழ் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட வேண்டும் என்பதும் எனக்கு விளங்கவில்லை. முதலாவது பாரதநாடு என்பதையும் நாம் எல்லாம் பரதர்கள் என்பதையே நான் ஒப்புக்கொள்ள முடியாது.

தோழர் பிள்ளை இந்தியா ஒரு நேஷன் என்கிறார். நேஷன என்று ஒரு தேசத்தையோ தேச மக்களையோ சேர்த்துச் சொல்வது அதன் மதம் மொழி ஆகியவற்றைப் பொறுத்தது என்றும் சொல்கிறார்.

அப்படியானால் இந்தியா ஒரு நேஷனா? அதற்கு மொழி எது? மதம் எது? இந்தியாவில் எத்தனை மதம் எத்தனை எத்தனை ஆச்சார அனுஷ்டானங்கள்? முதலாவது இந்துமதம் என்பதைத் தமிழர்கள் ஒப்புக் கொள்ளுகிறார்களா. தோழர்

(8-ம் பக்கம் பார்க்க)

# கன்னடத்தில் பேசினார்!

[முருகு. சுப்பிரமணியன்]

அரசியல் நிர்ணய சபையில் அடிக்கடி வேடிக்கையான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவை வேடிக்கையளவிலே, பலரை மகிழ்விப்பதோடு நின்றுவிடுவதில்லை. பல புதிய பாடங்களையும் கற்பிக்கின்றன அந்நிகழ்ச்சிகள். அத்தகைய நிகழ்ச்சியொன்று அண்மையில் நடைபெற்றிருக்கிறது.

அந்நிகழ்ச்சி சபையிலே கூடியிருந்த பெரும்பான்மையோருக்கு வேடிக்கையாகவும் பொழுது போக்காகவும் இருந்திருக்கலாம். தென்னாட்டாருக்கு திராவிடமக்களுக்கு அது வேதனையளிப்பதாக அமைந்திருக்கிறது. வேதனை வீண் வருத்தத்தைத் தருவதோடு நில்லாது, நம் விழிப்புக்குப் போதனையாக வேண்டும் என்ற கருத்தோடு அதனை இங்கே விளக்குகிறோம்.

யூனியன் அதிகாரங்கள் பற்றிய விவாதம் அரசியல் நிர்ணய சபையில் நடந்துகொண்டிருந்தது. தோழர் டி. சென்னையா என்பார் கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்ட உறுப்பினர். அவருக்கு விவாதத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல். எழுந்தார்; தன் கருத்தைத் தன் தாய் மொழியில் இயம்பினார்.

சபை உறுப்பினர்கள் சிலருக்கு இச் செய்கை பிடிக்கவில்லை. அவரைக் கேலி செய்ய எண்ணினர். "நண்பர் தீர்மானத்தை ஆதரிக்கிறாரா அல்லது எதிர்க்கிறாரா?" என்றார் ஒருவர். "விவாதத்திற்குச் சம்பந்தப்பட்ட விஷயத்தைத் தானே பேசுகிறார்?" என்றார் மற்றொருவர். "அவர் பேசும் மொழி யாதோ?" என்று இன்னொருவர் கேட்டுவைத்தார்.

தலைவருக்குச் சங்கடமான நிலை. "அவர் கன்னடத்தில் பேசுகிறார் என்று சொல்கிறார்கள்" என்றார் அவர். ஏனெனில் அவருக்கும் கன்னட மொழி தெரியாது.

இந் நிகழ்ச்சி மேற்பார்வையில் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. ஆனால் கூர்ந்து கவனித்தால் நமக்குப் பல உண்மைகள் விளங்குகின்றன. அரசியல் நிர்ணய சபையில் உள்ளவர்கள் ஹிந்தி, ஆங்கிலம் இவற்றைத் தவிர வேறு மொழியில் பேசுவதை விரும்பவில்லையென்று தெரிகிறது. அப்படிப் பேசினாலும் பேசும் உறுப்பினர்களை மட்டந்தட்டி அடக்கி விடுகிறார்கள். தலைவர் உட்படப் பலருக்கும் அங்கத்தினர் வேறு மொழியில் பேசுவது புரியவில்லையென்ற காரணத்தினால் அவர் கூறுவனவற்றில் உள்ள நியாய அநியாயங்கள் கவனிக்கப்படாமலே போகின்றன. தாய்மொழியில் பேசுவதனால் தன் உரிமையையே அந்த அங்கத்தினர் இழந்து விடுகிறார். எவ்வளவு நியாயமான வாதமாயிருந்தாலும் ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எடுத்துக் கூறப்பட்டாலொழிய அவை ஈடேற வழியில்லை. இந்நிலை கவனிக்கப்பட வேண்டியது. மாற்றம் செய்யப்பட வேண்டியது.

ஒன்று, எல்லோரும் ஆங்கிலத்தில்தான் பேசவேண்டும் என்று விதியிருக்க வேண்டும். ஏனெனில் அது ஏறக்குறைய இன்று இந்தியாவின் பொது மொழியாக, அரசியல் மொழியாக விளங்குகிறது. படித்த கூட்டத்தினர் அனைவருக்கும் (ஒரு சிலரைத்தவிர) விளங்கக் கூடிய மொழி அதுவே. ஆகவே ஆங்கிலத்தில் பேச வேண்டுமென்று கட்டாயம் இருக்கலாம்.

அடுத்து ஹிந்தியிலும் பேசலாமென்று சட்டம் அனுமதிக்குமானால், மற்ற தாய்மொழிகளில் ஏன் பேசக்கூடாது என்ற கேள்வி எழுவது இயற்கை. அதற்குப் பலமான நியாயமும் இருக்கிறது.

அயல் மொழியாகிய ஆங்கிலத்தை அனுமதிப்பவர்கள் ஏன் ஹிந்தியை அனுமதிக்கக்கூடாது என்று கேட்கலாம். ஆங்கிலம் அயல்மொழியாகுமானால், ஹிந்தியும் அதைத் தாய்மொழியாகக் கொண்டவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு அயல்மொழி தானே! இல்லை, ஹிந்தியை, இந்தியமொழி என்ற கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டுமென்று கூறினால்கூட, அது பொது மொழியாக இன்னும் எத்தனை ஆண்டுகள் செல்லுமோ என்றுதானே நாம் பதிலளிக்க வேண்டியிருக்கிறது. இங்கேதான் நாம் நன்கு கவனிக்க வேண்டும். ஆங்கிலம் இன்று பொது மொழியாக விளங்குகிறது. ஹிந்தி பொது மொழியாக வேண்டுமென்று கூறப்படுகிறது; இன்னும் பொது மொழியாகவில்லை. இந் நிலையில் ஹிந்தியில் பேசினால் எல்லோரும் புரிந்து கொள்வர் என்று கருதுவது தவறு. ஹிந்தியில் பேசுபவர்களைமட்டும் அனுமதிக்கப் பொறுமை கொண்டுள்ள

அங்கத்தினர்கள் ஏன் கன்னடத்தில் பேசுபவரை அனுமதிக்கக்கூடாது என்றுதான் நாம் கேட்கிறோம். ஹிந்தியில் பேசுவது நூறு பேருக்குப் புரியாமல் இருக்கலாம். கன்னடத்தில் பேசுவது இருநூறு பேருக்குப் புரியாமல் இருக்கலாம். இந்த வேறுபாடு அந்தந்த மொழியினரின் எண்ணிக்கையைப் பொறுத்தது. ஆகவே இருவர் பேசுவதும் சபையில் கூடியுள்ள அனைவருக்கும் புரியும் நிலைமையில்லை. எனவேதான் ஹிந்தியில் பேசுவதை வரவேற்கும் அங்கத்தினர்கள், கன்னடத்தில் அல்லது வேறெந்த மொழியில் பேசுவதையும் வரவேற்க வேண்டுமென்கிறோம். இதுவே நேர்மையாகும் என்றும் கூற விரும்புகிறோம்.

இது இயற்கைதானே, யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதுதானே என்று பலரும் நம் கருத்தை ஏற்றுக் கொள்வர். ஆனால் அரசியல் நிர்ணய சபையின் போக்கு இயற்கைக்கு மாறுபட்டிருக்கிறதே என்று கேட்டால் அவர்களே விழிப்பார்கள், சிந்திக்க மறுப்பார்கள். கன்னடத்தில் பேசுகின்றபோது எழுகின்றகேலி, அசிரத்தை, தட்டிக் கழிக்கும் மனோபாவம், எதனைக் காட்டுகிறது என்பது நம் சிந்தனையாக இருக்கவேண்டும். அன்று தோழர் சென்னையா எவ்வளவு வருத்தப்பட்டிருப்பாரோ நாம அறியோம். ஆனால் தோழர் சென்னையாவின் பேச்சின் இடையில் சில அங்கத்தினர்கள் கூறியிருக்கும் சொற்கள் நமக்கு மிகுந்த வேதனையளிக்கின்றன. தாய்மொழிப் பற்றுள்ள எவருக்கும் அவை வருத்தத்தைத்தான் தர முடியும். இன்று கன்னடத்திற்கு ஏற்பட்ட அவமதிப்பு நாளை ஏன் தமிழுக்கு நேரக் கூடாது என்று தமிழ்மக்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். இந்த அவமதிப்பு நீடிப்பதால் நேரும் விளைவுகளையும் எண்ணிப்பார்க்க வேண்டும். இவற்றிற்கொரு முடிவுகாண முயல வேண்டும். இல்லையேல் திராவிட இனத்தவர் எப்பொழுதோ ஒரு காலத்தில்தான் மானமுள்ளவர்களாக இருந்தார்கள் என்ற பழிக்கு நாம் இலக்காக நேரிடும் என்று எச்சரிக்கிறோம்.


**போர்வாள்**

திராவிடர் வார வெளியீடு

| | | | | |
|---|---|---|---|---|
| தனி இதழ் | ரூபா | 0 | 1 | 6 |
| ஆண்டு 1-க்கு | ,, | 5 | 0 | 0 |

விவரங்களுக்கு:

போர்வாள் அலுவலகம்,

பவழக்காரத் தெரு; சென்னை.


தோழர் சென்னையா கன்னடத்தில் பேசினார். பெரும்பான்மையோருக்கு அவர் கருத்துப் புரிய வில்லையென்றால் அவர் பேச்சு, மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். அதுதான் முறை. அதற்கு வசதியில்லையேல், அங்கத்தினர்கள் அவர் பேச்சைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். அதுதான் சபையின் மதிப்பைக் காப்பாற்றும். அப்படியின்றிக் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கேலி செய்யப் பயன் படுத்தியிருப்பது—அந்த அங்கத்தினரை அவமதிக்கப் பயன்படுத்தி யிருப்பது என்ன விளைவில் கொண்டு சேர்க்கும் என்று அவமதித்தவர்கள் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். "இந்த அவமதிப்பு அசட்டுத்தனம் மட்டுமல்ல; தேச ஐக்கிய உணர்ச்சிக்குத் தீங்கு விளைவிப்பதுமாகும் என்று நாம் எச்சரிக்கை செய்கிறோம்" என்று அதன் விளைவை நாம் எடுத்துக் காட்டுமுன்பே "தினமணி" எடுத்துக்காட்டி விட்டது. "தினமணி" இக் கண்டனத்தில் மு
னோடும் பிள்ளையாக இருப்ப
நமக்கு மகிழ்ச்சியளிப்பதோ
ஆச்சரியத்தையும் ஏற்படுத்
கிறது.

இம்மாதிரி நிகழ்ச்சிகள் தே
ஐக்கிய உணர்ச்சிக்குத் தீங்
விளைக்கும் என்றுதான் "தி
மணி" கருதுகிறது. நா
"ஐக்கிய உணர்ச்சி என்பது
ஒன்றில்லை. எனவேதான் இ
வாறு நிகழ்ச்சிகள் தாறுமாறு
நடைபெறுகின்றன" என்
கூறி வருகிறோம். ஹிந்தி பே
வோர், கன்னடம் முதல்
மொழி பேசுவோரைத் த
ளோடு சமநிலையில் வைத்து
பார்க்கவில்லை. அங்கே ஆ
டான்—அடிமைத் தொட
ஏற்பட்டு வருகிறது என்ப
இச்சிறு நிகழ்ச்சி நமக்
காட்டுகிறது. 'கன்னடம் பே
வோரும் இந்தியர்தாமே' என
அவர் கருதி யிருப்பார்களா
கேலிக் குறிப்பும் அவமதிப்
ஏற்பட்டிருக்காது. அதற்
மாறாக "அவர் பேசியதினுள்
கருத்தென்ன" என்று அ
புரிந்து கொள்வதில் முயற்சி
ஆர்வமும் ஏற்பட்டிருக்கு
ஏற்பட வில்லையென்றால் அ
கள் நம்மை இந்தியர்களா
கருதவில்லை, ஏதோ நம்மே
ஒட்டிக்கொண்டார்கள் என
எண்ணுகின்றார்கள் என்றுதா
நாம் கொள்ளவேண்டும். இ
னைப் புரிந்துகொள்ளப் பெ
படிப்புத் தேவையில்லை;
தகைய நிகழ்ச்சிகளே நமக்
பளிங்குபோல் காட்டி வரு
றன.

நாம் ஒதுக்கப் படுகிறோ
டில்லியில் தென்னாட்டாரு
மதிப்புத் தரப்படுவதி
இவை நாம் கண்கூடாகக் க
பவை. அப்படியிருந்தும்
"ஐக்கிய இந்தியா வ

(10-ம் பக்கம் பார்க்க)

# எழுத்தாளர் உலகம்

## ண்ணத் தாமரை

[ஆசிரியர் : ஆஸ்கர்
தமிழாக்கம் : தாமரைக் கண்
ணியார். விற்பனை உரிமை :
தமிழ்நாடு வெளியீடு. 33,
பிராட்வே, சென்னை. விலை
ரூ. 2.]

சிறந்த மேனாட்டாசிரியராகிய
ஸ்கர் ஓயில்டின் ஐந்து சிறு கதை
தமிழ் வடிவம் பெற்றுள்ளன
நூலில். மொழி பெயர்ப்பு
ன்று இதைச் சொல்கிறார்கள்
ளியீட்டாளர்கள். படிக்கும்
து மொழிபெயர்ப்பாகவே
ான்றவில்லை. முதல்நூல் போ
வ இருக்கிறது. கதைகளுள்,
பிர்த்தோழன் வண்ணத் தாமரை
ன்னும் இரண்டும் சிறந்தன ;
ணர்ச்சி வளம் கெழுமியன.
ல தமிழ்நடை—அழகிய பதிப்பு.
லையைக் கொஞ்சம் குறைத்திருக்
ாம்.

## தோ திராவிடர் தந்தை!

[ஆசிரியர் : சி. என். அண்ணா
துரை. புரட்சிக்கவி பணிமனை
பெங்களூர் விலை 0-5-0.]

தனக்கென்றே அமைந்த உயரிய
ிழ் நடையில், அறிஞர் அண்ணா
ை, திராவிடர் தந்தை என்ற
ன்பழைப்புப் பெற்ற சிந்தனைச்
பியின் சிறந்த இலட்சியங்களை
ாக்கும் சிறு நூல் இது. ஆயிரம்
த்துகள் அடுக்கி வரினும் தான்
ாண்ட கொள்கையினின்றும்
தும் பிறழாத பெரியாரின் நெஞ்
திண்மையை இந்நூல் மிக
ிமையாகப் படம் பிடித்துக்
ட்டுகிறது.

## சிறந்த பேச்சாளர்கள்

[ஆசிரியர் : தொடர்பன். வெளியீட்டாளர்கள் : தமிழர் பதிப்பகம், 81, லிங்க செட்டித் தெரு சென்னை 1. விலை ரூ 1.]

திரு. வி. க., சோமசுந்தர பாரதியார். பெரியார் ஈ. வெ. ரா, சேதுப் பிள்ளை, ஔவை துரைசாமி, கி. ஆ. பெ. விசுவநாதம், அண்ணாதுரை, முத்துராமலிங்க தேவர், ஜீவானந்தம், சிவஞானம் ஆகிய பத்துப் பேச்சாளர்களின் சொல்லாற்றலை நிரல் நிரலே விளந்து கூறும் அரிய நூல். கருத்தில் தெளிவு — சொல்லில் எளிமை— நடையில் கவர்ச்சி மூன்றும் இப் புத்தகத்தின் சிறப்பியல்புகள். பெரியாரைப் பற்றிய பகுதி நன்கு அமைந்துள்ளது. தமிழர் இல்லந் தோறும் இருக்கவேண்டிய புத்தகம் இது.

## திராவிடஸ்தான்

[திராவிடமணி பதிப்பகம், தெப்பக்குளம், திருச்சி. விலை 0-10-0.]

திராவிடநாட்டுப் பிரிவினை ஏன் வேண்டும் என்பதற்கான காரணங்களை விளக்கி தோழர் எஸ் முத்தையா அண்மையில் திருச்சி மாநாட்டில் ஆற்றிய விளக்கவுரையே இப்புத்தகம். சிக்கலான பல பிரச்சினைகள் இதில் தெளிவு படுத்தப் படுகின்றன.

## நிலவு

[பதிப்பாசிரியர் : புத்தூர் கிழார். நிலவுநிலையம். சென்னை 5. விலை அணா 4.]

"நிலவு" இதழின் நான்காம் புத்தகத்தில் இரகசிய மனிதர் எம். என். ராய் முதலிய பல நல்ல கட்டுரைகள் உள்ளன. நண்பர் இராதாமணாளனின் "ருஷிய நாட்டழகி" உள்ளம் உருக்கும் உணர்ச்சிச் சித்திரம்.

## தமிழ்க் கலை

[ஆசிரியர் : அ. மு. பரமசிவானந்தம். செயலிடம் : 34, வைத்தியநாத முதலி தெரு, சேத்துப்பட்டு; சென்னை. விலை அணா 4.]

ஆகஸ்டு செப்டம்பர் இதழ்கள் கிடைத்தன. பத்திரிகை முழுதும் தமிழ் ஆர்வம் ததும்புகிறது. மு. வரதராசனார் தீட்டிய "விடுதலையா" என்னும் எழுத்தோவியம் தொடர்ந்து வெளிவருகிறது. பத்திரிகையின் இலட்சியம் தனித் தமிழகம் காண்பது. தமிழ்க் கலையைத் தமிழர் வரவேற்பர் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

## சீர்திருத்தத் திருமணங்கள்

---

28-8-47-ல் விழுப்புரத்தையடுத்த செந்நெற்குன்றத்தில் ச. நா. குமரகுரு முதலியார் மகன் வித்வான் நமச்சிவாயனார்க்கும், செங்கம் பார்த்தசாரதி முதலியார் மகள் பாலாம்பிகைக்கும் 'போர்வாள்' ஆசிரியர் காஞ்சி மணிமொழியாரால் திருமணம் நடத்தி வைக்கப் பட்டது.

31-8-47-ல் காஞ்சிபுரம் சிவக்கொழுந்து முதலியார் மகள் லீலாவதிக்கும் சுந்தரவேலு முதலியார் மகன் நாகப்பனுக்கும் காஞ்சி மணிமொழியார் தலைமையில் திருமணம் நிகழ்ந்தது. தோழர்கள் N. V. நடராசன், M. முருகேச முதலியார், சின்னையா முதலியோர் திருமணம் பற்றி விளக்கிப்பேசினர்.

28-8-47-ல் காஞ்சிபுரம் கா. மு. துரைசாமி மகன் D. கிருஷ்ணனுக்கும், உத்திரன்மேரூர் புண்ணியகோட்டி அவர்கள் மகள் கனகவல்லிக்கும், 29-8-47-ல் துரைசாமி அவர்களின் மகன் D. அங்கமுத்துக்கும், பெரம்பூர் மதுரை அவர்கள் மகள் வள்ளியம்மைக்கும் தோழர் அண்ணாதுரை எம். ஏ. அவர்கள் தலைமையில் திருமணம் நடந்தது. புலவர் கோவிந்தனார், V. கண்ணப்பனார், D. C. கந்தசாமி, A. R. வெங்கட்ராமன், C. V. M. அண்ணாமலை முதலியோர் திருமணம் பற்றிப் பேசினர்.

பட்டாளிமக்களே! நீங்கள் விதைக்கிறீர்கள்; அயலான் அறுக்கிறன். நீங்கள் நெய்கிறீர்கள்; அயலான் அணிகிறன். நீங்கள் ஆக்குகிறீர்கள்; அயலான் அனுபவிக்கிறன். நீங்கள் ஆயுதம் செய்கிறீர்கள்; அயலான் அதை உங்கள் மீதே செலுத்துகிறன். விதையுங்கள்! ஆக்குங்கள்; ஆயுதம் செய்யுங்கள்; ஆனல் அவற்றை நீங்களே கையாளுங்கள்.

— ஷெல்லி

போர்வாள்

6—9—47 சனிக்கிழமை

# டில்லி சலோ!

திராவிடம், வளவயல்கள் நிறைந்த பொன்னடு; பார்க்கும் இடம் எங்கும் பசிய பயிர்கள் தலைதூக்கி நின்று நம்மை வருக வருக என அழைக்கும் திருநாடு; வரப்பு உயர நாட்டின் வாழ்வு உயரும் என்ற நன்மொழியை நன்குணர்ந்த பெருநாடு. உயிரோட்டமுள்ள சிற்ருறுகளும் பெருநதிகளும் சிரித்து விளையாட, மாமலைகளும் சிறு குன்றுகளும் அழகுசெய்ய, முப்புறமும் முத்தணிக்கும் கடல்கள் அலையெழுப்ப, சந்தனக் காடுகள் மந்தமாருதம் வீச, நன்செய் நிலங்களும் புன்செய் நிலங்களும் இவற்றின் இடை இடையே அமைந்து ஊரார்க்கும் உலகத்தார்க்கும் உணவளிக்கும் காட்சி இந்த நாட்டில் உண்டு; இந்நாட்டில்தான் உண்டு. ஆனல் இதே நாட்டில்தான் இன்று உணவுப் பஞ்சம் எனும்பேச்சு—உள்ளத்திற்கு வேதனை தரும்பேச்சு எழுந்திருக்கிறது.

சுற்றிலும் வயல்கள். இவற்றின் நடுவிலேயோ ஒரு கவளம் சோற்றுக்கும் வழியின்றி வதைபடும் திராவிடன். நாலாபுறமும் உணவைத் தரும் ஊற்றுக்கள். இவற்றின் ஒரு மூலையிலேயோ வயிருர உண்ணவும் உணவின்றித் தேங்கித் திகைக்கும் தமிழர் கூட்டம். ஒரு கணம், நினைத்தாலே நெஞ்சைக் கலக்கும் சேதி இது. ஆனல் இந்த நெஞ்சு நோகும் நிலையில்தான் இன்று திராவிடநாடு கிடத்தப்பட்டு இருக்கிறது. வெறுங் கற்பனை அல்ல இது—உண்மை! நாட்டு மக்களை மிரட்டும் பயங்கரமான உண்மை! நாலாவித கட்சிகளைச் சேர்ந்த நண்பர்கள் அனைவரும் தங்களிடையே உள்ள வேற்றுமைகளை மறந்து நின்று பரிகாரம்
தேடித் தீரவேண்டிய
உண்மை!

உணவுப் பஞ்சம் இன்று
திராவிடத்தின் வாயிற் க
வைத் தட்டுகிறது. ஏன் வ
தது இந்நிலை? யாருடை
பொறுப்பற்ற போக்
இதற்குக் காரணம்? பொன்
விளைந்த களத்தூர்கள்
நிறைந்த நாட்டில் பஞ்
மாமே, தங்கவயல்கள் செ
ந்த பூமியில் உண்பதற்கு
உணவில்லையாமே, அமை
சர்கள் அறிவிக்கிருர்களே
எப்படிவந்தது இப்பஞ்சம்
ஏன் அரசியலார் இதற்
முன்னமே மாற்றுத்தே
வில்லை? ஒரு நாட்டில் ப
சம் என்று சொன்னல்—
அதுவும் உழவுக்கும் தொழு
லுக்கும் வந்தனைசெய்யு
ஒரு நாட்டில் பஞ்சம் என்
சொன்னல் — உழுதுண்
வாழ்வதே வாழ்வு என்
பண்பாடும் ஒரு நாட்டி
பஞ்சம் என்று சொன்
அது ஒரு சிறு பிரச்சனை
அல்லவே! எவ்வளவு அல
சியப் போக்கு ஆளவந்தா
களிடம் இருந்திருந்தா
உழுதொழிலே தொ
லாய்க்கொண்ட ஒரு நா
டைப் பஞ்சம் மிரட்டும்
ஏன் இதை ஆட்சியின
எண்ணிப் பார்க்கவில்லை

திராவிடத்தில் பஞ்ச
என்பதே வேதனைதரு
சேதி. ஆனல் இதனினு
வேதனை மிக்க சேதி ஒன்
உளது.

உழுது பயிரிட்டு நெ
மணிகளை அறுத்தெடுத்து
குவிக்கும் உழவர்கள் உ
சாகத்துடன் பணிபுரி
வேண்டுமானல் அவர்களு
குத் தக்க ஊதியம் இருக்
வேண்டும். நெல்லுக்

று தரப்படும் விலையோ
ழைப்புக்கேற்ற ஊதியத்
உழவர்கட்குத் தருவ
இல்லை. உற்பத்தி குறைந்
ற்கு இது ஒரு முக்கிய
ன காரணம். பட்ட பாட்
குப் போதியபலன் இல்
ானால் உழவர்கள் கரு
ம கண்ணுவது எங்ஙனம்
வேதான் முதலமைச்
ஓமந்தூர் இராமசாமி
டியார் நெல்விலையை
கப்படுத்த எண்ணினர்.

திகப் படுத்தத்தான்
ண்டும் என்பீர்கள் நீங்
நாமும்கூட அதைத்
ன் சொல்கிறோம். நியா
ம் அதுவேதான். என்று
ஓமந்தூரார் விலையை
ர்த்த முடியவில்லை—
வே பஞ்சத்தைத் தடு
முடியவில்லை.

விலையை உயர்த்தாவிட்
ல் உழவனுக்கு உள்ள
ல் கட்டாது. எனவே
ள்ள மார்க்கெட்''டில்
ல் விலை விற்கத்தான்
ணுவான் அவன்.
ள்ள மார்க்கெட்'' வாணி
தைத் தடுக்கா விட்
லா மக்கள் மன்றத்
கு உணவு கிடைக்காது.
ல் உழவன் விற்கும்
னுக்குக் குறைந்த
யும் கொடுத்துவிட்டு
ன் கள்ளமார்க்கெட்
நெல் விற்பதையும்
த்துவிட்டால், அவன்
றும் ஊதியம் மிக மிகக்
றந்துவிடும்; உற்பத்தி
அவனுக்குள்ள உற்சா
ம் தேய்ந்துவிடும்.

ட்டில் வரவிருக்கும்
சத்தை நிறுத்த வேண்
ல் உணவு உற்பத்தி
பெருக்கவேண்டும்.
உற்பத்தி பெருகவேண்டு
மானல் உழவன் பெறும்
கூலி உயரவேண்டும் அதா
வது நெல்விலை ஏறவேண்
டும்.

நெல்விலையை உயர்த்த
வேண்டும் என்பதுதான்
ஓமாந்தூரார் கருத்தும்.
ஆனல் விலையைக் கூட்ட
வோ அவரால்முடியவில்லை.
ஆம், அவர் கைகள் கட்டப்
பட்டிருக்கின்றன.

விலை உயரா விட்டால்
பஞ்சம் வருமே என்கிறார்
திராவிடத்துமுதலமைச்சர்.
ஆனல் விலையை உயர்த்
தாதே என்கிறது டில்லி
தர்பார்.

"மாடுகளுக்கோ தீனி
வேண்டும்; விதைகளின்
விலையோ மிக அதிகம்;
பொருள்களின் விலையோ
ஒன்றுக்கு நாலென உயர்
ந்து விட்டது. நெல் விலை
ஏறினல் ஒழிய பயிரிட்டுப்
பயனில்லை'' என்கிறான்
உழவன். ஆமாம் அப்ப
டித்தான் என்று தலைய
சைக்கிறார் அமைச்சர்.
இல்லை—விலையை ஏற்றாதே
என்கிறது ஹிந்துஸ்தான்
மத்திய சர்க்கார்.

உணவுப் பிரச்னை நாட்
டின் உயிர் நாடிபோன்றது.
இத்தகு பிரச்னையிலும்
திராவிடம் தான் **விரும்பிய**
பாதைவழி **சென்று** உண
வுப் பஞ்சத்தைத் **தீர்த்துக்**
கொள்ள உரிமை **இல்லை.**
வடநாடு **பிறப்பிக்கும்**
ஆணைக்கு உட்பட்டு **அடங்கி**
அழிவதைத் **தவிர தான்**
வகுக்கும் திட்டப்படி **முன்**
னேற வழியில்லை.

இந்த நாட்டு **அமைச்சர்**
நல்ல திட்டம் **தீட்டலாம்;**
ஒழுங்கை விலை நாட்டலாம்;
உரக்கப் பேசலாம்; **ஊர்ப்**
பயணம் வரலாம். **ஆனல்**
"டில்லி அரசியல்" **கீறும்**
கோட்டை மட்டும் **தாண்டக்**
**கூடாது. வடநாட்டுப் பாசி**
**சம் வகுக்கும் வழியிலிருந்து**
**மட்டும் அப்பக்கம் இப்பக்**
**கம் பிறழக் கூடாது. சுதந்**
**தர இந்தியாவில் திராவிடம்**
**பெற்றுள்ள உரிமை வாழ்**
**வின் தன்மை இது.**

நாம் உண்ணவோ உண
**வில்லை. நம் விருப்பப்படி**
**உணவை உற்பத்தி செய்**
**யவோ நமக்கு உரிமை**
**இல்லை. உணவு இல்லையே**
**னும் பட்டினி இருக்கலாம்;**
**ஆனல் உரிமை இல்லையேல்**
**நாம் வாழ்வது ஏதுக்கு?**
**பலமான மத்திய சர்க்கார்**
**வேண்டும் என்று கூரை**
**யேறிக் கூக்குரல் இட்ட**
**"தினசரிகள்" விடை கூறட்**
**டும்.**

சுதந்தரம் நம் **பிறப்**
**புரிமை என்று முழங்கி**
**னேம். உடைமை போயி**
**னும் உயிரது போயினும்**
**உரிமை வேண்டும் உரிமை**
**வேண்டும் என்று வீர ஒலி**
**கிளத்தினேம். சுதந்தரமும்**
**வந்தது; "சொந்த ஆட்சி"**
**யும் பிறந்தது. ஆனல்**
**வந்த ஆட்சியிலோ உண**
**வுப் பிரச்சினையிலும் நமக்கு**
**உரிமை இல்லை. உரிமை**
**வாழ்வு என்பது இதுதானு?**
**அப்படியாயின் உரிமை**
**என்பதற்குப் பொருள்**
**அடிமை என்றிருக்க வேண்**
**டும்.**

.........இல்லை! **இல்லை!**
**திராவிடம் என்றைக்குமே**
**அடிமை வாழ்வில் ஆழ்ந்து**
**கிடக்கப் போவதில்லை!**
**என்றேனும் ஒரு நாள்—**
**அந்த நாள் மிக நெருங்கி**
**வருகிறது—" வடநாட்டுப்**
**பாசிசமே டில்லி சலோ**

(டில்லிக்குப் போ)" என்ற உரிமை முழக்கம் எழவே போகிறது—திராவிடர் கழக வட்டாரத்திலிருந்து மட்டுமல்ல—இங்கு அந்த முழக்கம் எழுந்து ஆண்டுகள் பத்து ஆகிவிட்டன—காங்கிரஸ் வட்டாரத்திலிருந்தும் பொதுவுடைமைத் தோழர்களிடமிருந்துங்கூட அந்த முழக்கம் எழும் நாளையே நாம் குறிப்பிடுகிறோம். கதர் சட்டையும் சிகப்புச் சட்டையும் கறுப்புச் சட்டையுடன் கைகோத்தவண்ணம், வடநாட்டுக் கம்பளிச் சட்டையைப் பார்த்து "டில்லி சலோ" என்று சொல்கிற காலம் வரவே போகிறது. வரப்போகிறது என்பதற்கான அறிகுறிகளே இன்றைய உணவுப் பிரச்னையில் வடநாட்டார் காட்டும் பிடிவாதம்!

---

## இந்தியர் என்றோர் இனமில்லை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கே. பி. பிள்ளை தன்னை இந்து என்று சொல்லுவாரானால் இந்துமத ஆதாரமாகிய வேதத்தையும் மனுதர்ம சாஸ்திரத்தையும் கீதையையும் ஒப்புக் கொள்ளுகிறாரா. அதன்படி நடக்க சம்மதிக்கிறாரா. மற்றவன் நடக்கவாவது இவர் அனுமதிப்பாரா. இந்து மதத்தில் கே. பி. பிள்ளையின் இடம் எது. இந்து மதத்தால்தான் இந்தியா நேஷன் ஆயிற்று என்றால் அதாவது நேஷனுக்கு மதமே பிரதானம் என்றால் இஸ்லாமியருக்கும் கிறிஸ்தவருக்கும் பௌத்தருக்கும் பார்சிகளுக்கும் இந்தியா நேஷனாகுமா. எதைக்கொண்டு அவர்கள் இந்தியாவை நேஷன் என்பது?

மதராஸ் ஒரு நேஷன் அல்லவென்றும் அது தனித்து இருக்க முடியாது என்றும் தோழர் கே. பி. பிள்ளை சொன்னார். மதராஸ் ஒரு தனி நேஷனாய் இருந்தது. இன்றும் இருக்கிறது. அதுதான் திராவிடம். அதனுடைய நாகரிகம் ஆச்சார அனுஷ்டானம் வேறு; வங்காளம் பம்பாய் இவற்றின் நாகரிகம் ஆச்சார அனுஷ்டானம் வேறு. ஆங்கில ஆட்சியால்தான் ஒன்றுக்கொன்று நேசபாவமான அறிமுகமாவது ஆகி இருக்கிறது. இங்கிலீஷ் ஆட்சியும் மொழியும் ஒழிந்து ஹிந்தி ஆட்சியும் மொழியும் வந்தால், அன்றே, மதராசானது, ஜர்மனி, இட்டாலி, பிரஞ்சு முதலிய நாடுகளைப்போல ஒரு தனி நாடாக மாறிவிடும்.

இந்தியா பலமதம் பல வகுப்பு பல தனிப்பட்ட இலட்சியம் கொண்ட கோரிக்கைகள் உள்ள "நாடு." இது உலகில் உள்ள மற்ற நாடுகளைப்போல, மதம் அரசியல் சமூகவாழ்க்கை முதலியவைகளில் ஒரே மாதிரி இலட்சிய முடையதல்ல.

மற்றும் வடநாடும் தென்னாடும் ஒரே லட்சிய முடையதாகுமா என்று உங்களைக் கேட்கிறேன்.

வடநாட்டாரால் இதுவ[...] தென்னாட்டாருக்கு ஏற்பட்[...] நன்மை என்ன என்று யார[...] வது விரல்விட்டுச் சொல்லட்டு[...] நம் மக்கள் ஏமாற்றப்பட நமக்[...] யோக்கியதை தெரியாத வ[...] நாட்டாரைப் பிடித்து வந்[...] காட்டி வஞ்சித்ததல்லாம[...] தென்னாட்டுச் சமூக சம[...] பொருளாதார அரசியல் மு[...] லிய விஷயங்களுக்கு வடநா[...] எதில் பயன்பட்டது.

ஆகவே நாம் ஏமாறுவதற்கு[...] தான் வடநாடு உபயோகப்படு[...] றது. இன்றைய அரசியலை[...] பார்க்கின்றபோது எக்காரண[...] கொண்டாவது எப்பாடு பட்ட[...] வது நம் நாட்டை வடநாட்டு[...] தொடர்பிலிருந்து தனியாய்[...] பிரித்துக் கொண்டால் ஒழி[...] நமக்கு விடுதலையோ மானபே[...] ஏற்படப் போவதில்லை எ[...] பது உறுதி.

---

## ஏஜெண்டுகளுக்கு!

சென்ற வாரம் அனுப்பி[...] பில்படி உடனே பணம் அனு[...] பாதவர்களுக்கு அடுத்த வா[...] முதல் பத்திரிகை நிறுத்தப்படு[...]


**கதிரவன்**

மாதம் இருமுறை வெளியீடு

ஆசிரியர் : புலவர் செல்வராஜ்

கண்கவர் வனப்பு—அழகிய அமைப்பு—அரிய கட்டுரைகள்—சிறந்த கதைகள்—உயரிய கவிதைகள்—அரசியல் விளக்கங்கள் யாவும் கொண்டது.

தனி இதழ் அணா 6. ஆண்டுத் தொகை ரூ 9'

**கதிரவன் நிலையம்,**

94. பிராட்வே, சென்னை 1.

னை ஓவியம்:

# பிச்சைக்காரி

[முடி அரசன்]

ஆடவர்களே இப்படித் தான்
ந்து கொள்ளுகிருர்கள்.
ணே! கனியே! உயிரே!
லே! என்று வாயாரப் புகழ்ந்து
சுவார்கள் முதலில். தன் எண்
ம் நிறைவேறி விட்டாலோ
ப் பேச்சு மாறிவிடும். அதிலும்
ல் கட்டுத் தளர்ந்து அழகு
றந்து விட்டால் அலட்சியம்
ன் பெண்களுக்குப் பரிசாகக்
டுக்கப் படும் ஆடவர்களால்.
தல் காதல் என்று கத்துகிருர்
ள். அதுவும் தெய்வீக மானது
றெல்லாம் போற்றுகிருர்களே-
த அப்படி யெல்லாம் சொல்லு
ர்களென்று தெரிய வில்லை.
இச்சையைத் தானு காதல்
று சொல்லுகிறது இந்த உல
. ஜாதி-மதம்-பணம் ' இந்த
ர்ப்புச் சக்திகளை யெல்லாம்
பிடித்து விட்டு ஒத்தஅன்புடைய
க் கடைசி வரை வாழ்வ
லவா காதல்! ஆனுல் இந்த உல
திலே காதல் அப்படியில்லை.
கத்தை நாம் ஏன் சொல்ல
ண்டும்! என்னுடைய வாழ்க்கை
தல் என்ற கருவியால் கொலை
ய்யப்பட்டு விட்டது. அதற்கு
கம் என்ன செய்யும். காதலை
பியதால் நான் இன்று பிச்சைக்
ரி" என்று கோபமும் துன்பமும்
ந்த குரலிலே தனக்குத் தானே
சிக் கொண்டிருந்தாள், அந்தப்
சைக்காரி.

* * *

திருநெல்வேலியில் கனகசபா
ப் பிள்ளை தன் மகள் காவே
கு இசையறிவை வளர்க்கவேண்
என்று எண்ணி 25 ரூபாய்
ம்பளத்தில் நாகரெத்தினம்
ற ஆசிரியர் ஒருவரை ஏற்பாடு
ய்தார். நாள் தோறும் மாலை
இசைப் பயிற்சி நடைபெறும்.
வேரிக்கு உடலைப் போலவே குர
ும் ஓர் தனியழகு இயற்கை
லேயே அமைந்திருந்தது. "அந்த
ழ்வு தான்" என்ற பாட்டை
வும் அழகாகவும் திறமையாக
பாடுவாள், அவர் சொல்லிக்
டுப்பதை அப்படியே கற்றுக்

கொள்ளுவாள். இதனுல் ஆசிரியருக்கு அவளிடத்தில் ஓர் அலாதி அன்பு. அன்பு அப்படியே இருந்து விட வில்லை. எதற்கும் வளர்ச்சி ஒன்றுண்டல்லவா? அதன் படி அன்பு வளர்ந்து கொண்டே வந்தது கடைசியில் காதல் என்ற கட்டத்தை அடைந்தது. அவளும் அந்தத் தோணியில் பயணம் செய்யத் தொடங்கி விட்டாள். தகவல் எப்படியோ தந்தைக்கு எட்டியது. கண்டித்தார். கண்டிப்பு, காதல் நெருப்புக்கு எண்ணெய் போன்றது. அப்புறம் கேட்கவா வேண்டும்! 'எக்ஸ்பிரஸ்' உதவியால் எழும்பூர் வந்து சேர்ந்தனர். "மானந்தான் எனக்குப் பெரிது. மகள் பெரிதல்ல"—என்று இருந்து விட்டார் பிள்ளை.

சென்னையிலே ஒரு வீடு வாடகைக்குப் பிடித்துக்கொண்டார்கள். உணவுக்குக் கையிலிருந்த நகைகள் தான் உதவி செய்தன. அந்த உதவியும் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வந்தது.

ஓர் நாள் அங்கே நடந்த தொழிலாளர் கூட்டத்திற்குச் சென்றிருந்தான், நாகரெத்தினம். கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. அதையடக்கப் போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர். அந்தத் தடி நாகரெத்தினம் தலையையும் பதம் பார்த்தது. படுகாயம். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் பட்டவர்களுக்குள் அவனும் ஒருவன். இரண்டு மாதங்களுக்குப் பின் மண்டையிலிருந்து காயங்கள் ஆற்றப் பட்டன. ஆனுலும் அவன் இப்பொழுது பைத்தியக் காரன். அடி தலையில் விழுந்த அதிர்ச்சியால் ஏற்பட்ட மாறுதல் அது. ஆஸ்பத்திரியிலிருந்து பைத்திய விடுதிக்கு அனுப்பப் பட்டான்.

* * *

வந்து விடுவான் வந்து விடுவான் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த, காவேரி ஏமாற்றம் அடைந்தாள். ஒரு நாள் ஒரு மாதம் ஆகியும் வரவில்லை. வாடகை வீட்டிலிருந்து காலி செய்யப் பட்டாள். நடுத் தெருவில் நிற்கும் காவேரியின் கண்ணீரைவிடப் பணத்தைப் பெரிதாக நினைத்தான் வீட்டுக் காரன்.

"அவர் கையிலிருந்த பணம் தீர்ந்ததும் ஓடி விட்டார். நாம் இனி தகப்பனுர் முகத்திலும் விழிக்க முடியாது. போனுலும் ஊரார் ஏசுவார்கள்" என்று எண்ணினுள் காவேரி. பிழைப்புக்கும் வேறு வழியில்லை. என்ன செய்வது என்று எண்ணி யெண்ணிப் பார்த்தாள். கடைசியில் ஓர் முடிவுக்கு வந்தாள். இருக்கவே யிருக்கிறது நம் நாட்டுச் சொத்து. அது தான் பிச்சை. ஆம் அவள் பிச்சைக்காரியானுள்.

அவள் விரும்பியிருந்தால் அவளுடைய அழகுக்கும் குரலுக்கும் "ஸ்டார்" ஆகியிருக்கலாம். என்னமோ அவள்மனம் விரும்பவில்லை. அவள் கற்பைப் பெரிதாக மதித்தமையால் பிச்சைக்காரி ஆகிவிட்டாள். கலக்கம் அடைந்த காரணத்தால் வேறு வேலையும் செய்து பிழைக்கவும் அவள் மனம் நாடவில்லை.

பல மாதங்கள் ஓடி விட்டன. அதனேடு அழகும் ஓடிவிட்டது. ஆனுல் அவள் குரலில் இருந்த இனிமை மட்டும் மாறவே இல்லை: பாடுவாள், பிச்சை போடுவார்கள், உண்பாள், ஓரிடத்தில் பேசாமலிருந்து விடுவாள். இது அவள் தினசரி வாழ்க்கை.

* * *

பைத்திய விடுதியிலிருந்த நாகரெத்தினம் ஓர் நாள் மதில் மீது ஏறிக் கீழே விழுந்து விட்டான். பலத்த காயமடைந்தான். மீண்டும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப் பட்டான். சிலவாரங்களில் குணம் அடைந்தான். கீழே விழுந்த அதிர்ச்சியால் மறுபடியும் அறிவுத் தெளிவு ஏற்பட்டது. பைத்தியம் நீங்கி விட்டது. ஆயினும் அவன் கைகளை இழந்த நொண்டி. காயங்கள் ஆற்றப் பட்ட நாகரெத்தினம் வெளியேற்றப் பட்டான். பழைய

நினைவுகள் சிறிது சிறிதாக வந்தன. ஓடினான், காவேரியைத் தேடி அங்கு அவள் இல்லை!

கதறினான். "காவேரி! காவேரி! நீ எங்கே சென்றாய்? என்னைப் பற்றி என்ன நினைத்தாயோ! நீ உயிரோடு இருக்கிறாயா? இறந்து விட்டாயா? எங்கிருக்கிறாய்? ஐயோ! நான் இறந்திருக்கக் கூடாதா! மீண்டும் பைத்தியம் பிடித்து விடும் போல இருந்தது அவன் நிலைமை.

கண்ணீர் சிந்திய கண்களுடன் நடந்தான். வரும்போது ஒரு வீதியிலே ஏதோ இசை கேட்டது. நின்று விட்டான். கூர்ந்து கவனித்தான். ஆம்! எனக்குப் பிரியமான பாட்டல்லவா இது! அதுவும் நான் கேட்ட குரல்.

"அந்த வாழ்வு தான் எந்த நாள் வரும்" அந்த இசை வந்த திசை நோக்கி நடந்தான்; 'நான் இழந்த வாழ்வு எந்த நாள் வரும்' என்ற எண்ணத்துடன். அவன் மனதின் விரைவை விட அவன் கால்கள் விரைந்தன. அருகில் சென்றான். உற்றுப் பார்த்தான்.

'ஆம்—பழைய குரல் தான்! கேட்ட குரல் தான்! ஆனால் அவள் அல்லவே! அவள் அழகு எங்கே—இந்த அவலட்சணம் எங்கே."

பாடப் பாடப் பதை பதைத்தது அவன் உள்ளம். வெடித்து விடும் போல் இருந்தது. காவேரி! காவேரி! என்று கதறி விட்டான். பாட்டு நின்று விட்டது.

"நம்முடைய பெயரைச் சொல்வது யார்?" என்று அவளும் கூர்ந்து பார்த்தாள். கன்னத்திலிருந்த தழும்பைப் பார்த்து அடையாளம் கண்டு கொண்டாள்.

"அத்தான்!"

"காவேரி!"

அணைத்துக் கொண்டு அழுது விட்டாள் காவேரி.

"என்னை விட்டு விட்டு எங்கே போனீர்கள்? ஏன் உங்களுக்கு இந்த நிலை வந்தது. கைகள்......?" நிகழ்ந்ததைக் கூறினான்.

"ஐயோ! உங்களைத் தவறாகக் கருதி விட்டேனே! மன்னித்து விடுங்கள். உங்களை உயிரோடு கண்டேனே அதுவே போதும்." என்றாள்.

"காவேரி! உன்னை இந்தக் கதியிலா காணவேண்டும். என்னாலல்லவோ உனக்கு இந்த நிலை. என்ன தொழில் செய்து உன்னைக் காப்பாற்றுவேன். கைகளையும் இழந்து விட்டேன்......"

"அத்தான்! அதனால் என்ன? நான் இருக்கிறேன். கவலைப்பட வேண்டாம். உணவுக்குப் பஞ்சம் இல்லை. நான் பிச்சைக்காரி."

"பிச்சைக்...காரி; பிச்சை...க்..காரி ஆம்! வேறு வழியில்லை." என்று மெதுவாக அவன் உதடுகள் அசைந்தன.

"அந்த வாழ்வுதான் எந்த நாள் வரும்" இத்தனை நாட்களாகத் தெருவிலே தனிக் குரல் கேட்கும். இப்பொழுது இணைந்த இரு குரல்கள் கேட்ட வண்ண மிருக்கிறது.

---

## திராவிடநாடு பிரிவினை மாநாடு.

14—9—47-ல்

கடலூரில்

நடைபெறும்.

திராவிடத் தோழர்களே!

சாதி மத கட்சி வேற்றுமையின்றித் திரண்டு வாருங்கள்.

---

கன்னடத்தில் பேசுனு...

(4-ம் பக்கத் தொடர்ச்...

நாமெல்லோரும் இந்தி... என்று பேசுவதற்குப்... வாங்குவதில்லை. "ஓட்டார்... சென்றொருவன் வாழ்தலி... அந்நிலையே கெட்டான் ... படுதல் நன்று" என்ற குற... நினைவுக்கு வரவேண்டிய... தர்ப்பம் இது. "ஐக்கிய... தியா" நமக்குத் தரவிரு... பரிசுகளுக்கு எடுத்துக் கா... தான் தோழர் சென்னையர்... அரசியல் நிர்ணய சபை... கிடைத்த அவமதிப்பு. இன்... எத்தனையோ பரிசுகள் நம... காத்திருக்கின்றன!

அதற்குள்ளே நாம் ப... படித்துக் கொள்ளலாம். ... தனியினம் என்பதை ... லாம். திராவிடம் இந்திய... பிணைப்பிலிருந்து விடுபட ... டும் என்று திட்டமாகக்... லாம். தமிழர், தெலு... கோளர், கன்னடியர் ... முன்னணி இனியேனும்... படலாம். திராவிட இன... உயர்வுக்கு—அதன் சுய... தைக்குப் பங்கம் நேர்... கிறது. இன்றே ஏற்பட... ஒன்றுபட்ட முன்னணி!

---


## ஈரோட்டுப் பாதை

ஆசிரியர்: மா. இளஞ்செழியன் (B. A. Hons.)

[தமிழ் நாட்டிலே வீசிய பெரும் புயல் சுயமரியாதை இயக்கம்; புயல் வீசிய விதத்தைக் கூறுவது இந் நூல்.]

விலை அணா 8 அழகிய பதிப்பு

தனிப் பிரதி வேண்டுவோர் 9 அணா தபால் தலை அனுப்பவு...

வியாபாரிகளுக்கு 20 பெர்ஸெண்ட் கழிவுண்டு.

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு,

சென்னை-1.




**ன்னமே சொல்லி இருந்தால்!**

''என்னுடைய உதவியோ ங்கிரஸ் உதவியோ இல்லாம லயே முஸ்லிம் லீக் பிரதானம் டைந்துவிட்டது. சரியாகவோ ல்லது தப்பாகவோ முஸ்லிம் ள் ஆதரவை அது பெற்றுவிட் தனுல் அது பெரிதாகிவிட்டது. ங்கிரசும் நானும் எங்கள் முன் ருந்த உண்மை நிலையைக் ண்டு அதை ஒப்புக்கொண்டு மாளிக்க வேண்டியவர்களாகி ட்டோம்.''

என்று காந்தியார் போன ாரம் கல்கத்தாவில் நடைபெற்ற ரார்த்தனைக் கூட்டத்தில் சால்லியிருக்கிறுர். இதை காந் யார் ஏழு ஆண்டுகளுக்கு முன் , 1940-ல் லாகூரில் முஸ்லிம் க் பாகிஸ்தான் இல்லையேல் ர்ஸ்தான் என்ற வீர முழக் செய்தபோதே, ஒப்புக் ாண்டிருந்தால் எத்தனை எத் ன நவாகலிகளைத் தடுத்திருக்க ம்? எவ்வளவு உயிர்ச் சேதம் ன்றிருக்கும்! ஏனே காந்தியார் ந்த உண்மையை அன்று ணர மறுத்தார் என்ற சோகக் ல் சிந்தனைத் திறம் உடையார் னவருக்கும் எழுதல் இயற் கயே

**டெலியே!**
**கத்தைப் பார்!**

பலமான இருப்புக் கோட் டையென விளங்கிய ஆங்கில ாதிபத்தியம் தன் கண் முன்னுல் கவிழ்ந்து விழுவதைக் கண்ட பின்னருங்கூட சுண்டைக்காய் அளவுள்ள ஹாலந்து இந்தோனீசியா மீதுள்ள தன்னுடைய பிடியைத் தளர்த்த மறுக்கிறது. சுதந்தரம் சமத்துவம் சகோதரத்துவம் என்ற விடுதலைப் பண் பாடியதன்றி வேறு குற்றம் ஏதும் செய்தறியாத இந்தோனீசியா மீது மடமடவென குண்டுகளை வீசவும் மக்களைச் சுட்டுத் தள்ளவும் பீரங்கி வேட்டுகளை எழுப்பவும் ஹாலந்து துணிந்துவிட்டது. ''சுண்டெலியே! சிங்கத்தைப் பார்! அதோ பிரிட்டானியம் இந்தியாவை விட்டு ஓடுவதைப் பார்! ஏகாதிபத்திய எண்ணத்தை விட்டொழி'' என்று உலகம் முழுவதுமுள்ள நேர்மையாளர்கள் இடித்துரைத்தும் ஹாலந்து வழிக்குவர மறுக்கிறது. இந்த அதிகார மமதை இன்னும் எத்தனை நாளைக்கு அரசோச்ச முடியும்? ஜனநாயக உணர்ச்சி என்னும் சூறாவளிக் காற்றில் அகப்பட்டுக் கொண்டு, அம்மியும் குழவியுமே அதோ ஆகாயத்தில் பறக்கின்றனவே, இந்த எச்சில் இலையின் கதி என்ன என்பதைத்தானு சொல்ல வேண்டும்?

**மறுபடியும் கல்கத்தா!**

சென்ற திங்கள் 'கல்கத்தா காய்ச்சல்' கொஞ்சம் ஓய்ந்திருந்தது. இந்துக்களும் முஸ்லிம்களும் மனக் கசப்பை மறந்து, வேற்றுமையை' வளர்க்கும் விபரீத வியாக்யானங்களைச் சற்றே குறைத்து, நச்சு வாடையை எழுப்பும் தீச்சொற்களை மட்டுப்படுத்தி, சிறிதளவு அன்புடனே கூட ஒன்று கலந்து உறவாடினர். எங்கள் ராஜாஜி கவர்னரானுர்—ஆகவேதான் கலகம் நின்றது என்று கூறிக் களித்தது ''கல்கி.'' கல்கத்தாவுக்கு வந்தார் காந்தி—தந்தார் இன்பம்—அண்ணல் மகாத்மாவின் அற்புத சக்தி இது வாழ்க என்று சொல்லிச் சொல்லிப் பூரிப்படைந்தது ''தினசரி'': ''என்ன அற்புதம்! என்ன அற்புதம். கிலாபத் காலத்திலேகூட இவ்வளவு ஒற்றுமையாக இருந்ததில்லையே இந்துக்களும் முஸ்லிம்களும்!'' என்று காந்தியாரே கூறினுர். இந்த ஒற்றுமை நீடூழி வாழ்க வென்று நான் ஆண்டவனைப் பிரார்த்திககிறேன்—நாட்டு மக்களே நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள் என்றுர் கவர்னர் ஆச்சாரியார் அமளிக்குப் பின் ஆநந்தம் என்று காங்கிரஸ் ஏடுகள் களித்துக் கூவிப் பத்து நாட்கள்கூட ஆகவில்லை, அதற்குள் பழையபடி கலவரம் உச்சநிலை அடைந்துவிட்டது. மறுபடியும் கல்கத்தா துக்கபுரி ஆகிவிட்டது. கொலை—கொள்ளை—குத்து—வெட்டு—சித்திரவதை —தீமூட்டல்—வெடி வைத்தல் இவ்வளவும் முன் இருந்தபடியே தலை நீட்டத் தொடங்கி விட்டன. உயிருக்கு ஆபதது—உரிமையுடன் வெளியே உலவ முடியாது என்ற நிலையில் மக்கள் செத்த வாழ்வு வாழ்கின்றனர் அங்கு. இந்த நிலை மாறியாக வேண்டும்.

எப்பாடு பட்டேனும் தலைவர்கள்—ஹிந்து முஸ்லீம் இரண்டு சமுதாயங்களையும் சேர்ந்த வடநாட்டுத் தலைவர்கள்—இந்த நிலையை மாற்றியாக வேண்டும். சாந்தியும் சமாதானமும் எங்

களும் நிலவச் செய்ய வேண்டும். அமைதியும் ஆனந்தமும் எவ்விடத்தும் தங்கச் செய்ய வேண்டும். தீப்பொறி பறக்கப் பேசும் படபடப்பைக் குறைத்துக்கொள்ள வேண்டும். ஆத்திரமூட்டும் மொழிகளை வீசுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். எம்மை அசைப்பார் யாருண்டு—யாம் இட்டதே சட்டம் என்று கொக்கரிக்கும் படேலிசம் குறையவேண்டும். கலகம் தொலைய வழி இதுதான். தலைவர்கள் இந்த வழியைப் பின்பற்றுவார்களா?

### ஓமந்தூரார் தாராளம்!

முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் 10,000 பஞ்சாப் அகதிகளைச் சென்னை மாகாணத்தில் வைத்துக் காப்பாற்றுதற்கு ஒப்புக்கொண்டு அதற்கேற்ற திட்டங்களையும் தீட்டுகிறாராம். மெத்தச் சரி! தான் பட்டினி இருந்தும் பிறர்க்கு உணவளிப்பதுதானே திராவிடப் பண்பு! அந்தப் பண்பாடு கொஞ்சமும் குலையாதவாறுதான் அமைச்சர் பணி ஆற்றி இருக்கிறார். மகிழ்ச்சிக்குரிய சேதியே இது! ஆனால் ஒரே ஒரு சந்தேகம். செப்டம்பர் மாதத்திற்குப் பிறகு சென்னை மாகாணத்தவர்க்கே உணவில்லை என்று கைவிரிக்கிறாரே உணவு அமைச்சர் ஸ்ரீலஸ்ரீ சௌந்தரராஜ அய்யங்கார், (உணவு அமைச்சர் மாறி விட்டாரோ என்று சந்தேகப்பட வேண்டாம்—டி. எஸ். எஸ். இராஜனுடைய முழுப் பெயர் தான் இது!) இந்தப் பஞ்சாபியாகளுக்கு மட்டும் எப்படித்தான் அவர் உணவளிக்கப் போகிறாரோ?

### "ஐயோ எங்களைக் காப்பாற்றுங்கள்!"

சென்ற கிழமை மதுரையில் ஜமீந்தாரர்களின்கூட்டமொன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதுபோது, ஜமீந்தாரி ஒழிப்பு மசோதாவைக் கொண்டுவர தற்போதைய சட்டசபை தகுதியற்றதென்றும் மொழி வழி மகாணங்கள் பிரிக்கப்படும் வரை இத்தகைய மசோதாக்கள் கொண்டுவரப் படுவது முறையற்றதென்றும், மேலும் இந்தப் பிரச்சினையை முன்னிறுத்தி புதுத்தேர்தல்கள் நடத்தப்பட்டு புது ஆட்சி அமைந்தபிறகே இந்த மசோதா சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், தமிழ் நாட்டில் உள்ள ஜமீந்தாரர்களுக்கு உதவும்படி தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கட்சித் தலைவர்களையும் கேட்டுக் கொள்வதென்றும் தீர்மானிக்கப் பெற்றது......எப்படி ஜமீந்தாரர்களின் அபயக் குரல்! ஐயோ பாவம் என்று சொல்லத் தோன்றவில்லையா உங்களுக்கு? எல்லாக் கட்சிக்காரர்களும் காப்பாற்ற வேண்டுமாமே இவர்களை! ஆமாம், காப்பாற்றத்தான் வேண்டும். தலைமுறை தலைமுறையாக ஜமீந்தாரர்கள் செய்துவந்த அட்டூழியங்கள் உருண்டு திரண்டு இன்று அவர்களை மிரட்டுகின்றன. இந்த ஆபத்திலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும். உழைத்து ஓட்டாண்டிகளான உழவர்களைக் கசக்கிப் பிழிந்த கொடுங்கோலர்கள் எங்கே எங்கே என்று உழவர் முன்னணி போர்க்கோலம் கொள்கிறது. இந்த அபாயத்திலிருந்து ஜமீந்தாரர்களைக் காப்பாற்ற வேண்டும். எங்களைப் பசியிலும் பட்டினியிலும் வதைய விட்டுவிட்டு சுகபோகத்தில் புரண்ட சுகுமாரர்களை விடமாட்டோம் என்று மக்கள் மன்றம் கொந்தளிக்கிறது. இந்தச் சூறாவளியிலிருந்து ஜமீந்தாரர்களைக் காப்பாற்ற வேண்டும். காப்பாற்றுவதற்கான ஒரே ஒரு வழி ஜமீந்தாரர்களிடமிருந்து ஜமீன் உரிமையைப் பறித்தெடுத்து விடுவதுதான். அந்த உரிமையை அரசியலார்க்கு அளித்து விடுவதுதான். ஜமீந்தாரி ஒழிப்பு மசோதாவை உடனே நிறைவேற்றி விடுவதுதான். இல்லையேல் உழவர் எழுச்சி என்ற பெருவெள்ளம் ஜமீந்தாரர்களை அடியோடு அடித்துக் கொண்டோடி விடும்..... ஜமீந்தாரர்களே! வீண் சலசலப்பு வேண்டாம். உங்கள் காலம் மலையேறிவிட்டது. ஜமீந்தாரி ஒழிப்பு மசோதாவுக்குத் தலை வணங்குங்கள். நீங்கள் ஒழியவேண்டும் என்பதில் தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளுக்கிடையே கருத்து வேற்றுமையே கிடையாது. ஆகவே உங்கள் சலசலப்பு பலன்தராது என்பதை உறுதியாக உணர்ந்து கொள்ளுங்கள்.

### வ. உ. சி. கல்லூரி

தூத்துக்குடியில் மறைந்த மன்னர் வ. உ. சிதம்பரனார் நினைவாகக் கல்லூரி ஒன்று காண வேண்டும் என்று அவ்வூர்ப் பிரமுகர்கள் சிலர் முயன்றனர் என்றும் ஆனால் அவர்கள் போதிய பண இருப்பைக் காட்டவில்லை என்ற காரணம் காட்டி சென்னைப் பல்கலைக் கழகத்தினர் கல்லூரிதிறப்பதற்கு அனுமதி தர மறுத்துவிட்டனர் என்றும் அண்மையில்தெரியவந்தது. பொன் விளைந்த தமிழ்நாட்டில் வீர சிதம்பரனாரின் நினைவாக எழும் கல்லூரிக்குப் போதிய பணம் இல்லை! இரண்டு ஜன்ம தண்டனைகளைப் பெற்றும் நெஞ்சங் கலங்காது ஏகாதிபத்தியத்தை நடுங்கவைத்த தமிழனின் நினைவுச் சின்னம் எழுப்ப தமிழருக்கு மனம் இல்லை! தேசிய இயக்கம் தமிழ் நாட்டில் உருவாவதற்காகத் தன்னுடைய உடல் பொருள் ஆவி மூன்றனையும் தத்தம் செய்த தியாகத்தின் சிகரத்திற்கு மரியாதை செய்ய நேரமில்லை தேசியத் தம்பிகளுக்கு! என்ன துர்ப்பாக்கியமான நிலை! துரோகமே! உன் விளையாட்டு என்பது இதுதானோ?

———

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers, 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)